[1974 மார்ச் 9

திருமூர்த்தி நீர் வீழ்ச்சியில் வெள்ளம்.

*342 விஞ—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற 1973 அக்டோபர் 26-ம் தேதி உடுமலேப்பேட்டை திருமூர்த்தி நகர் நீர்வீழ்ச்சியில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தின் காரணமாக உயிரிழந்தவர் எத்தனை பேர்?

(இ) திடீர் வெள்ளத்தின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இருவர்.

(இ) தலத்தில் பெய்த மழை.

திரு. கே. எ. வகாப் : தலேவரவர்களே, தலத்தில் ஏற்பட்ட மழையின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டு இருக்கிருர்கள். இதற்காக மக்களே மழை காலங்களில் ஜாக்கிரதையாக இருக்கும்படி கூற அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா? இப்படிப்பட்ட விபத்துகள் நிகழாவண்ணம் இருப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காட்டாற்றில் திடீரென்று வெள்ளம் வந்து விட்டது. திருமூர்த்திநகர் என்னுடைய தொகுதியில்தான் இருக்கிறது. அவர்கள் குளித்துக் கொண்டிருந்தபோது அதிகமாகத் தண்ணீர் வந்து விட்டதால் இந்த விபத்து ஏற்பட்டது. அதிலே 8 பேர் அடித்துச் செல்லப்பட்டு, 6 பேரைக் காப்பாற்றியிருக்கிருர்கள். இரண்டு பேர்கள் உயிரிழந்து இருக்கிருர்கள். திடீரென்று ஏற்படும் விபத்துக்களுக்கு அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது.

மேலேச்சொறிக்குளம் சாலே.

*343 விஞ—திரு. த. சோனேயா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மதுரை–மண்டபம் நெடுஞ்சாலேயில் இருந்து மேலேச்சொறிக்குளம் வரை தார் ரோடு போடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லே.

1974 மார்ச் 9]

திரு. த. சோணையா : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். மேலைச்சொறிக்குளம், பாப்பாங்குளம், ஆலங்குளம், பழையனூர் போன்ற பஞ்சாயத்துக்களை ஒன்றாக இணைத்து ரோடு போட்டால், அந்த வழியாகக் கிட்டத்தட்ட 4000 ஜனத்தொகை பயன்பெறும். அதை மனதில் வைத்து அந்தப் பஞ்சாயத்துக்களை ஒன்றாக இணைத்து அந்த ரோடு போடும் திட்டத்தைப் பரிசீலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அவருடைய மூலக் கேள்வி மேலைச்சொறிக்குளம் பஞ்சாயத்து பற்றியதாகும். அது 4.8 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அது திருப்புவனம் ஒன்றியத்தினலே பராமரிக்கப்பட்டு வருகிறது. இணைப்புச்சாலைத் திட்டமாக எடுத்துக் கொள்ள வேண்டுமானல் 1,500 ஜனத்தொகைக்கு மேல் உள்ள இடமாக இருக்கவேண்டும். 5 பஞ்சாயத்துக்களை ஒன்றாக இணைத்து 4,500 ஜனத்தொகை வருகிறது என்று சொன்னால், பல ஊர்களைச் சேர்த்து சாலைகளை அமைக்கும் திட்டங்களைத் தற்போது கவனிப்பதற்கு இல்லை.

திருப்புவனம் ஒன்றியத்தில் கண்மாய்கள் மராமத்து

* 344 வின.—**திரு. த. சோணையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கணக்கனேந்தல், வில்லியானேந்தல், வாலியானேந்தல் கண்மாய்கள் 1971-72 ஆம் ஆண்டில் உடைப்பெடுத்தனவா ?

(இ) ஆம் எனில், அவ்வுடைப்புகளை அடைப்பதற்கு அரசு உத்தரவிட்டுள்ளதா?

(உ) அதற்கான செலவுத் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) இதற்காகத் தனியாக ஆணை ஒன்றும் பிறப்பிக்கவில்லை எனினும், சிவகங்கை கோட்டாட்சியாளரால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உடைப்புகள் அடைக்கப்பட்டன.

(உ) ஆம்.